ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

எப்பொழுதும் ஸுகமே வேண்டுமெனக்கோரும் பிராணிகளுக்கு அதை அடையவொட்டாமற் செய்கின்றவர் சத்ருவெனப்படுவார். அந்த சத்ருக்களும் ஆந்தரசத்ருக்களென்றும், பாஹ்யசத்ருக்களென்றும் இரு வகைப்படுவார்கள். காமக்ரோதாதிகள் ஆந்தரசத்ருக்களாம். நமது காரியங்களைக் கெடுக்கும் பிராணிகள் பாஹ்யசத்ருக்களாம். இவ்விரு வகைச்சத்ருக்களால் சிரேயஸ்ஸாதனத்தில் நமது பிரவிர்த்தி கெடுக்கப் படும்பொழுது விபரீதகாரியங்களில் பிரவிருத்தி உண்டாகிவிடுகின்றது. அத்தருணத்தில் விபரீதகாரியபிரவிர்த்தியால் நேரிடும் பாபத்தை பரிஷத்தினிடம் தெரிவித்து அப்பரிஷத்தால் விதிக்கப்படும் பிராயச்சித்தத்தைச்செய்து பரிசுத்தனாகிறான். அல்லது தார்மிகனான அரசனிடம் தனது தீயதொழிலைத் தெரிவித்து அவனால் விதிக்கப்படும் சிக்ஷையையடைந்து சுத்தியடைகிறான் என்று நமது தர்மசாஸ்திரங்களில் கூறப்படுகிறது. அப்படியிருக்கையில் அரசாங்கத்தாரே பாபகாரியத்தில் பிராணிகளை பலாத்காரமாக பிரவிர்த்திக்கும்படி செய்வார்களானால் வேறு எவரிடம் சொல்லி அதற்குப் பரிகாரத்தைத் தேடிக்கொள்ளுவார்கள். கீழ் கோர்ட்டில் விபரீதமாய்த் தீர்ப்பானதை மேல்கோர்ட்டில் அதைத் தெரிவித்து அனுகூலநியாயத்தையடைந்து இஷ்டத்தையடைவதுபோல் தற்கால அரசாங்கத்தில் தர்மகாரியமானது விபரீதமாக்கப்படுமானால் இதற்கு மேல்பட்டஸ்தானமாகிய பரமேச்வரனது ஸபையில் இந்த அநீதியைத் தெரிவித்து நியாயப்படி பரிகாரத்தையடைந்து கோரின பயனைப் பெறுவதே தகுதியாகும். ஆகவே விவாகமென்ற ஹிர்துக்களின் முக்கிய தர்மத்தில் ராஜாங்கம் விபரீதமாய் சட்டமிட்டிருப்பதை பரமேசுவரனது ஸபையில் தெரிவிப்பதுதான் ஆஸ்திகர்களின் கடமை. ராஜாங்கத்துச் சட்டத்தைவிட பரமேசுவரனது சுருதி, ஸ்மிருதிவடிவமான ஆக்ஞையே ஆஸ்திகர்களுக்கு முக்யமாக ஆதரிக்கத்தக்கது. ராஜாங்கத்துச்சட்டத்தை மீறியதால் இஹலோகத்தில்மாத்திரம் ஏதோ சில கெடுதிகள் சேரிடலாம். பரமேசுவரனது ஆக்ஞையை மீறிவிட்டால் லோகலோகாந்தரங்களில் எவ்வளவோ ஜன்மங்களாக கஷ்டப்படவேண்டிவரும். ஆகலால் விவாஹ விஷயத்தில் சுருதிஸ்மிருதிகளுக்கு விரோதமாக நடப்போமானால் இஹத்திலும் பரத்திலும் கஷ்டத்திற்கே ஆளாகுவோம். பரலோகத்தில் நமக்கு சிராத்தாதிகளால் உபகரிக்கும் ஸந்ததியையும் இழந்துவிடுவோம். ஸத்புத்திரனில்லாமையால் 'புத்' என்ற நரகத்தைவிட்டு வெளியேறமாட்டோம். ஆகையால் இஹலோகத்தில் அனுபவிக்கும் ஸ்வல்பகெடுதியே சிறந்ததென தர்மவிவாஹத்தைச்செய்து சிரேயஸ்ஸையடைவோமாக.

சுபம்.!

பத்திராதிபர்,

# ஆர்யதர்மம்.

சுக்ல-௵ ஐப்பசி-௴ ௮௳

## திருச்சி அத்வைதஸபையில்

# விவாஹப் பிரஸங்கம்.

நாளது சுக்கில-௵ ஐப்பிசி-௴ 2௳முதல் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவரும் திருச்சி அத்வைதஸபையில் திருவாதி பிரம்மஸ்ரீ விச்வநாதசாஸ்திரிகள்அவர்கள் இரண்டாந்தேதி இரவு சாரதா மசோதாவிற்குக் கண்டனமாக அரியதோர் பிரஸங்கம் செய்தார்கள். அதன் ஸாராம்சமாவது—இந்துக்களுடைய வேதவிஹித மான ஸகல தர்மங்களையும் அனுஷ்டிப்பதற்குத் தகுந்த ஆச்ரமம் கிருஹஸ்தாச்ரமம் ஒன்றே. கிருஹஸ்தனென்றால் சாஸ்திரீய முறைப்படி ஸமானஜாதிஸ்திரீயை ருது ஆவதற்குமுன் பாணிக் கிரஹணம் செய்துகொண்டவனேயாவான். ருது ஆவதற்குமுந்தி செய்யப்படும் விவாஹம்தான் தர்மியமான விவாஹம். மற்றவை அதர்மமேயாம். ஆனால் மனுஸ்மிருதியில் ‘ருதுவானபின் மூன்று வருஷபரியந்தம் பிதாவானவன் கன்னிகையை விவாகம் செய்து கொடுக்காவிடில் அக்கன்னிகை ஸ்வயமாகவே கணவனைவரித்துக் கொள்ளலாம்’ என்று கூறியிருப்பதால் ருதுவானபின்னும் விவாஹம் கூறப்படுகிறதே என்று சங்கைசெய்வது கூடாது. சுருதி, ஸ்மிருதிகளில் ஒரு கர்மத்தை விதிக்குமிடத்து அதற்கு முக்கிய காலத்தை பிரதானமாகக்கூறி அதிற் செய்ய நேராவிடில் அடுத்ததோர் கௌணகாலத்தையும் அதிலும் நேராவிடில் ஆபத்காலத்தை விதிப்பது வழக்கம். பிரகிருதவிவாகவிஷயத்தில் 8, 9-வது வயது முக்கிய காலம். ருதுவாவதற்கு முந்தியவரை கௌணகாலம். ஆபத்காலம் இந்த மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டது. அதுவும் பிராமணர்களுக்கல்ல. ‘இந்தப்பெண்ணை மதத்தால் மோஹமடைந்த எந்த பிராமணன் விவாகம் செய்கிறானோ அவன் பங்க்திக்கு அர்ஹனல்ல, சிராத்தத்திற்கு அர்ஹனல்ல, ஸம்பாஷணத்துக்கு அர்ஹனல்ல’ என்பதாதி பிராமணவிஷயத்தில் நிஷேதித்திருக்கிறபடியால் இது பிராமணரல்லாதாருக்கு அத்யந்த ஆபத்தில் விதிக்கப்பட்டதென கருதவேண்டும். ஆனால் மசோதா

சட்டமாய்விட்டபிறகு இந்த விசாரம்செய்வது க்ஷௌரம்செய்து கொண்டபின் நாள் நக்ஷத்திரம் பார்ப்பதுபோலென்று நினைக்கக் கூடாது. தர்மகார்யமானதால் தர்மத்தை கட்டளையிட்டவாது ஆக்ஞையை மீறிநடப்பது தார்மிகர்களுக்குத் தகுதியல்ல. சட்டத்தை மீறியதற்காக அரசாங்கத்தார் தண்டிப்பதையும் கவனிக்காமல் பரமேசுவரனது கட்டளையே அனுஸரிப்பது தகுதியாகும். பரமேச்வரனது கட்டளையே சில காரியங்களில் மீறிநடக்கத் துணிந்த நம்மவர்களுக்கு ராஜாங்கத்துச் சட்டத்தைமீறிநடப்பது அஸாத்தியமாகாது. பரமேச்வரனது ஆக்ஞையை மீறியதால் தான் இந்தச்சட்டம் நம் தலையில் விழுந்தது. ஆகவே ஆஸ்திகர் அனைவரும் இந்த விவாகவிஷயத்தில் பரமேச்வரனது ஆக்ஞைப் படியே நடந்து சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# புராணவிமர்சம்.

## நவீனமார்க்கம் நாசகாருண்ணியம்.

மனிதஜன்மத்தைக் கடத்தேறச்செய்யும் மார்க்கங்களில் "காருண்யம்." என்பது ஒன்றாகும். இது ஜீவகாருண்யம், தேககாருண்யமென இருவகைப்படும். இதிலும் ஜீவகாருண்யம் என்பது இரண்டு பிரிவுள்ளதாகிறது.

1. ஜீவனை பிராணபத்திலிருந்து ரட்சித்து சுகம்பெறச் செய்வதும்.

2. ஞானோபதேசத்தால் சம்சாரசாகரத்தினின்று ஜீவர்களைக் கடைத்தேறச்செய்வதுமாம். இவ்விரண்டையும் சிபிசக்ரவர்த்தி, பீமசேனன் ஸ்ரீராமானுஜசாரியர் முதலியமகான்கள் அனுஷ்டித்துக் காண்பித்திருக்கிறார்கள்.

1. சிபிசக்கிரவர்த்தி ஓர் மாடப்புறாவிற்காக தன் சரீரத்தையும் அறுத்துக்கொடுத்தார்.

2. பீமசேனன் ஏகசக்கிர நகரத்தில் வசிக்கும்காலத்தில் ஓர் பிராமணகுமாரனுக்காக தானே பகாசுரனுக்கு பலியாகச்சென்று அந்நகரத்தை கஷ்டத்திலிருந்து விடுவித்துரக்ஷித்தான்.

3. ஸ்ரீராமனுஜாசாரியரும் தன்குரு ஆஞ்ஞையைக்கடந்து சர்வஜனங்களுக்கும் மோக்ஷதர்மத்தை உபதேசித்தார். இவை

போன்றவைகள் ஜீவகாருண்யமெனப்படுகிறது. இதில்ஜீவபிராணிகளுக்கு அன்னுகாரம், ஜீவனத்தொழில் இவைகளால் உபகாரம் புரிவது கேவலம் தேககாருண்ணியம் எனக்கருதவேண்டும்.

இம்மாதிரிகாருண்ணிய பேதத்தின் தத்துவங்களிருக்கவே பஞ்சமர்களை அயுத்தோச்சாடனத்தினுல் உயர்த்தி அதிக்கிரமமாக தேவலயங்களில் பிரவேசிக்கச்செய்துவிட்டால் அது மஹிமை பெற்ற ஜீவகாருண்ணியமாகுமென்று நவீனபண்டித சிரேஷ்டர்கள்கருதி இவ்விதமே பஞ்சமர்களை உபசேத்தால் சீர்திருத்தி அதற்கென்று ஓர் நவீனகாருண்ணிய மார்க்கமும் திறந்துவைக்க முயற்சித்துவருகிறுர்கள். இன்னவீனமார்க்கத்துக்கு "நாசகாருண்ய மார்க்கமென." ஒருவாறு பெயரிடுவது உசிதமேயாகும். ஏனெனில் வர்ணுசிரம தர்ம்ம நியமங்களை அதிக்கிரமித்து நடக்கஆதாவளித்து மனிதர்களை அதோகதிக்கு உள்ளாக்குவதால் இதை மூன்றுவதாகிய நாசகாருண்ய மெனக்கருதுவது நியாயமேயாகும்.

இன்னவீன மார்க்கத்தைத்திறந்து வைப்பதற்காக சமீபகாலத்தில் "பண்டிதமாளவியா" "திருனுவாய்" என்ற ஊரில் "கோளீய ஹிந்து" சபையில் அத்தியக்ஷாாக (President) ஸ்தானம்பெற்று உபதேசப்செய்தபோது, சபை அவாறுகொள்கைக்கு வித்தியாசமாகவே மாறிவிட்டதாக அறியப்படுகிறது. இம்மாதிரியான அபிப்பிராய வித்தியாசத்திற்கு காறணமென்னவெனில் "சாதுர்வர்ணம் அழியக்கூடியதல்ல" என்ற ஓர்வாக்கியமேயாம். இச்சபையானது வர்ண்ணபேதமே உலகிலிருக்ககூடாதென முக்கியநோக்கத்துடன் முயற்சித்து வந்துகொண்டிருக்க அதற்கு நேரிடையாக "சாதுர்வர்ண்ணியம் அழியக்கூடியதல்ல" என்று ஓர்வாக்கியம் "பண்டிதமாளவியா" சொல்லிவிட்டார். இக்காரணம்பற்றியே சபையானது பண்டிதரின் உபதேசத்திற்கு ஆதாவளிக்காமல் மாறிவிட்டது எனவிளங்குகிறது. பண்டிதரின்தந்திரம் "கோளத்தில்" பலிக்கவில்லைஎன்று தேசிய பத்திரிகைகளும் கூவுகின்றன.

இவாது உபதேசத்தால் தீண்டாமையை ஒழிக்கச்சொல்வதால் அது ஆசாரநிஷ்டர்களுக்கும் சாதுர்வர்ண்ணியம் ஒழிக்கக்கூடியதல்லஎன்று சொல்வதால் அது ஆசாரமற்றவர்களுக்கும் அதிருப்தியையே விளைவித்துவிட்டது.

வெளவால்' என்ற பிராணியை பக்ஷிகளும், மிருகங்களும், சேர்த்துக்கொள்வதில்லை. ஆனால் இரண்டினத்திலும் சேர்த்துக் கொள்ளக்கூடிய சில அடையாளங்களுள்ளதுமாம். அதுபோலவே "பண்டிதரும்" இருதிறக்காரர்களாலும் அபிமானிக்கப்படாமல் தனியான நடு நிலைமையைவகித்து, ஆசார, அநாசாரங்களைக் கலந்து கற்பித்து மேன்மைபெறுவதானது இக்காலத்துக்கு உசிதமெனக்கருதுகிறார்போலும். சாஸ்திரரகஸ்ஸியங்களை பாமரர்களுக்கு எடுத்துரைத்து நல்வழிநடக்கச்செய்வது அறிஞர்களின் வேலையாகும். அதன்றி "ஏறும்குரங்கினத்திற்கு" ஏணிவைத்துக் கொடுப்பதுபோல பாமரபஞ்சமர்களை துஷ்கிருத்தியத்தில் தூண்டிவிடுவதாவது உபத்திரவத்திற்கும் உறம்வைத்ததுபோலவேயாம். வதம்செய்வது பாபகாரியமேயாகும், அறியாதவனுக்கு அதைச் செய்யும்படித் தூண்டிவிடுகிறவனும், செய்கிறவனும், பார்த்திருப்பவனும், சேர்ந்தவனும், புஜித்தவனும், ஆதரித்தவனும், வதம் செய்தவனுக்கொப்பானவனென்று "பாரதம்." உபதேசிக்கிறது. இதையெல்லாம் நன்கறிந்த பண்டிதமேதாவிகளும், அக்கிரமத்திற்கும், ஆபத்திற்கும், ஆதரவளித்து, ஆதிக்கம்பெற அத்தப்பு மார்க்கத்தில் புத்தியை நுழையவிட்டதைக் கவனிக்கும்போது (இகசுகத்தைக்கருதிய மகான்களும் இகழ்ச்சிபெறுவார்கள்.) என்ற ஆப்தவாக்கியம் நன்குவிளங்கிற்று. லோகோபாரிஎன்ற ஹோதாவில் மதாட்சணத்தில் மஹிமைவாய்ந்த "பண்டிதமாளவியாவின்" உபதேசம் வெறுக்கத்தக்கதாக வந்துமுடிந்ததற்கு வேறுமுக்கியமான காரணமொன்றுண்டு. அது தெய்வசங்கல்பத்தைத்தடைசெய்யக்கூடிய உபதேசமொழிகளேயாகும். எவ்வளவு வித்தியாசக்தி சாமர்த்தியமுள்ளவனானாலும், ஈசனால் வர்ணாச்ரமவிதிகள் வகுக்கப்பட்டிருக்கும்போது, அவரதுசங்கல்பத்தையறியவோ, தடைசெய்யவோ, மாற்றிவைக்கவோ, மானிடனுக்கு சக்திசிறிதுமில்லை என்பதை ஸ்ரீபாகவதத்தில் "சுகசாரியாள்."

न तस्य कश्चित्तपसा विद्यया वा न योगवीर्येण मनीषिया वा ।
नैवार्थधर्मैः परतः स्वतो वा कृतं विहन्तुं तनुभृद्विभूयात् ॥

எந்தமானிடனும் பகவானுடைய செய்கையை தவத்தாலும், வித்தையாலும், யோகவீரியத்தாலும், சாமர்த்திய புத்திபலத்தாலும், தனத்தாலும், தர்ம்மங்களாலும், தானாகவாவது, பிறரை ஆச்ரயித்

தாவது, வேறு விதமாகச்செய்வதற்கு சக்திபெறமாட்டான் என்ற உபதேசத்தால் விளக்கி நன்குஅறிவித்திருக்கிறார். உதாரணமாக பல சரிதங்களும் விளக்கி வருகிறது.

முற்காலத்தில் ஈசநியமத்தை மாற்றியமைத்து சுகம்பெறக் கருதிய "வேனன்" என்ற இராஜன் ஹிரண்யகசிபு, கம்சன், முதலிய தேகாபிமானிகள் முயற்சித்து வந்ததும், அதனால்அவர்களடைந்த துன்பங்களும், நமது புராணசரித்திரங்களின் மூலமாக நன்கு அறிந்திருக்கிறோம். வர்க்சாமர்த்திய பலத்தால் எதுவும் செய்துவிடலாமென்று எண்ணி முயற்சிப்பவர்களை "வேனன், ஹிரண்ணியகசிபு, கம்ஸன்." என பெயரால் ஏன் அழைக்கக்கூடாது. பாவிருத்திக்கு பலன் அளிப்பவன் பகவான். "விதைத்ததேவிளையும்" எள்ளைவிதைத்துவிட்டுக் கொள்ளை கொய்யமுடியாது என்பது நிச்சயம், பண்டிதரின் உபதேசத்தில் ஓர் சந்தோஷமடையக்காரண மிருக்கிறது. அதாவது மனிதஜன்மமடைந்தவனுக்கு, ஆலயதெர்சனம் ஓர்திவ்விய ஔடதம் போலவாம். ஔடதத்திற்கு பத்தியபியமம் எவ்விதம் முக்கியமாகுமோ அதுபோல தேவதரிசன ஔடதத்திற்கு அதன் ஆசாரநியமங்கள் பத்தியமுறைபாகும். "பத்தியத்தால் பலன்." என்பது போல "ஆசாரத்தால் ஆதிக்கம்." என்பதும் உண்மை.

உதாரணம்:— இராவணன் 3½-க்கோடி வயது ஜீவித்திருக்கவாம்பெற்று பக்தசிகாமணியாய் விளங்கிவந்தான் ஆனாலும் இவன் ஈசநியமாசாரங்களை லங்கனம்செய்து மார்க்கம் தவறிநடந்ததால் 3-கோடிவயது வீணில் நசித்து ½-கோடிவயது ஜீவித்திருந்தானென்று புராணமூலம் அறியப்படுவதால், இம்மாதிரியான புராணங்கள் மனிதர்களை சன்மார்க்க உபதேசத்தால் எவ்வளவு மஹிமை பெறச்செய்கிறது. இவைகளைக் கட்டுக்கதைகள் என்று எண்ணுவது எவ்வளவு அறிவீனம்.

பெரியோர்களால் நவீன காருண்யமார்க்கமென உபதேசிக்கும் வழியானது மனிதஜன்மத்தை பாழாக்கக்கூடிய தாகையால் அவ்வழியில்ச்செல்லாமல் சன்மார்க்கவழியில் செல்லும்படி நமது புத்திக்கு பகவான், சக்தி, பக்தி, பலமளித்து ரட்சிப்பானாக.

K. S. சங்கராமசாஸ்திரி,
கொட்டாரக்கரை.

503

# ஆன்மாவும், சரீரமும்.

நமது தேசத்தில் வெகுகாலத்திற்குமுன் சார்வாகரென்றும், நான்கு வகைப்பட்ட பௌத்தர்களென்றும், ஸப்தபங்கிவாதிகள் என்ற ஜைநர்களுமாகிய ஆறுவகை நாஸ்திகர்களிருந்தார்கள். இவர்களினுட்பிரிவு அனேகமுண்டு. எல்லா நாஸ்திகர்கள் போன மார்க்கங்களெல்லாம் அக்காலத்துதித்த பெரியோர்களால் மறுக்கப்பட்டு, நடுநாட்களில் அப்பெயர் இப்பெரும்பூமண்டலத்தில் மறைந்துபோயிருந்தன. நாம் கேட்டமட்டிலும் ஒரு தேசத்தாராவது சுத்தமாய் நாஸ்திகத்தை மதமாகக் கொண்டாடுவதில்லை. எல்லா மதங்களிலும் தத்துவ ஆராய்ச்சியில் சோம்பலுற்ற சிலர் வெளுத்ததெல்லாம் பாலென்று நினைக்கும் சிலபேதைகளைப்போல கண்டதெல்லாம் ஸத்தியமென்றும், மேற்கேயுதித்த மகான்கள் கொண்டதெல்லாம் குருவாக்கியமென்றும் நம்புகின்ற இக்காலத்தவருள் சிலரைப்போல முந்தியும் சிலரிருந்தார்களென்றே கேள்வி. அப்படி அவர்கள் சொல்லும் ஸித்தாந்தத்தை நமது தேசத்துத் தர்க்கசாஸ்திரிகள் பலவாறாய்க் கண்டித்திருக்கிறார்கள். அவர் அவ்வாறு கண்டித்தும், அந்த மதங்கள் இப்பொழுது வளர்ந்து வருவது எல்லோரும் அறிந்த விஷயமே. நமது தேசத்தில் நாகதாளியென்னும் ஓர்வகைக்கள்ளிவெட்டி வெகுஆழமான குழியில் மூட்டம் போடப்பட்டிருந்தபோதிலும் பின்பு சிறிதுகாலம்சென்றவுடன் தானே ஒருபலமான வேருடன் கிளம்புவதுபோல் முற்காலத்துப் பெரியோர்களால் வேரறுபட்ட இந்நாஸ்திகமதங்கள் தற்காலம் அனேகக் கருவிகளையும் வைத்தியநூல்களையும் துணைக் கருவிகளாய்க்கொண்டு நம்மவரைப் பகட்டிவருகின்றது. அது விஷயத்தில் முக்கியமாய் அவர்களுக்கும் ஆஸ்திகர்களுக்கும் அனேகவிஷயங்களில் பலவிவாதமிருந்தபோதிலும் முதலில் ஓர் கடவுள் உண்டென்றும், சரீரத்துக்கு வேறாய் ஜீவன் ஒருவன் உண்டென்றும், சுவர்க்கம், நரகம், புண்யம், பாபம் இவையுண்டென்றும் நன்கு ஹேதுக்களால் எடுத்துரைக்கவேண்டியது ஆஸ்திகர்களுக்கவசியமாதலால் முக்கியமாய் ஜீவன் ஈசுவரன் முதலியவைகளைப்பற்றி சிறிது இங்கெடுத்துரைப்பாம்.

இவ்விஷயமாய் ப்ரதிவாதிகளின் வினக்கள்:—

1. ஆத்மா என்பது யாது?
2. உயிர் என்பது யாது?
3. மனம் என்பது யாது?
4. இம்மூன்றுக்கும் ஏதேனும் ஸம்பந்தமுண்டா?
5. ஆத்மா அரூபமா? ரூபமுள்ளதா?
6. ரூபமுள்ளதாயின் புலப்படவேண்டும். அப்படிக்கில்லாவிடில் அரூபமாகிய அவ்வாத்மா இப்பெரிய ரூபமுள்ள சரீரத்தை எவ்வாறு நடத்தும்?
7. அவ்வாத்மா சரீரத்தைக்காட்டிலும் வேருகுங்கால் எப்பொழுது சரீரத்தில் வந்தது? எப்பொழுது சரீரத்தை விடும்? எவ்விதம் விட்டு எங்கே போகும்? அது போகும் வழி எது?
8 ஆத்மா அணுவா? விபுவா? அணுவாகில் இப்பெரிய சரீரத்தைநடத்த எங்ஙனம் வல்லமையுடையதாக ஆகும்? விபுவாகில் தூரதேசத்திலுள்ளது ஏன் அனுபவிக்கப்படவில்லை?
9. ஆத்மா ஞானவடிவமா? அப்படியல்லவா? சரீரத்தைக்காட்டிலும வேருயும் ஞானவடிவமாயுமிருந்தால் குழந்தைகளின் அறிவுக்கும், பெரியோர் அறிவுக்கும் வேறுபாட்டுக்குக்காரணம் யாது?
10. சரீரத்துக்கு வேருய் ஜீவனுள்ளதாக அனுபவமும் வியவஹாரமுமுண்டா?
11. அது சரீரத்திலும் வேருயிருக்கவேண்டியதவசியமா?
12. அது அழிவுற்றதா? அல்லது நித்தியமா?

இவை முதலியன.

இவைகளை ஒவ்வொன்ருய் விரித்து மறுப்பாம்.

1. முதலில் ஆத்மா என்பது யாது?

இக்கேள்வியின் தாத்பரியம் சரீரத்தில் ஓர் பாகமான மூளைக்கு அறிபுந்தன்மையுளதாதலால் அறிவைக்கொண்டு ஆத்மாவை ஸாதிப்பது கூடாதென்பது. அதாவது—இச்சரீரத்தில் அறியும் தொழில் ஜீவனென்னும் வஸ்துவுக்குள்ளதல்ல. அது மூளை

யின் குணமே, ஜீவனென்பவனொருவனிருப்பதும் பொய்யே, ஆதலால் மூளையை அறியுந்தன்மையுளதெனச் சொல்லுவதே நியாயம். ஏனெனில் இச்சரீரத்தில் எங்கும் வியாபித்து நிறைந்திருக்கும் நரம்புகள் ஒன்றுசேர்ந்து முறுக்கிக்கொண்டு முதுகெலும்பின்வழியாக தலையிற்சென்று மூளையைத்தொட்டிருப்பதால் இந்த மூளை சரீரத்தில் நடக்கத்தக்க ஒவ்வொரு விஷயமும் சேரக்கூடிய ஓரிடமாய்க் காணப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் ஒரு விஷயத்தை ஆலோசிக்கும்போது தலை மண்டையோட்டுக்குள் ஒருவித அசைவு உண்டாவதுபோல் அநுபவமுண்டு. நெடுங்காலம் ஆலோசனைசெய்தால் தலையில் வலியுண்டாகின்றது. ஒருஸமயம் மூளை கலங்க ஓர் அடி தாக்கினால் ஒன்றும் தோன்றுவதில்லை. இந்த மூளையில் பித்தம் ஸம்பந்திக்கும்போது அறிவுநிலைமை தப்புகின்றது. அப்பொழுதுதான் பைத்தியம்பிடித்தவனென்கிறார்கள். அந்த மூளையில் ஓரோருபாகம் ரோகம் முதலியவற்றால் கரைந்தால் காமம், கோபம், பொறாமை முதலிய சிற்சில குணங்கள் காணப்படுவதில்லை. அதுகொண்டு அதுவே புத்தியெனச் சொல்லலாயிற்று. சரீரத்திலடங்கிய ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பிரயோஜனம் கிடைத்திருக்க இதற்கு வேறு பிரயோஜனம் அகப்படாததுபற்றி இது மற்றொரு வஸ்துவின் தொழிலென்று சொல்லக்கூடாத அறிவுக்கிடமென்பதுமொவ்வும். அறிவென்பது வஸ்துவைக் காட்டும் பிரகாசம். ஆகவே நரம்புகளைப்பற்றியே வஸ்துக்களை உணருவது உசிதம். அந்த நரம்புகளில் ஒவ்வொரு நரம்பு கெட்டால் ஒவ்வொரு புலன்கள் வழிமாறி அதன்வழி போகும் வஸ்துக்களின் அசைவு குன்றிப்போவதும் வழக்கம். ஆதலால் இக்காரணங்களைக்கொண்டு மூளையின் குணமே அறிவாதலால் அந்த மூளையினும் வேறாய் ஜீவனை ஸாதிப்பது எங்ஙனம் பொருந்தும் என்று. இவர்கள் சொல்லும் வழி இன்னும் பல விருப்பினும் ஒருபானை சோற்றுக்கு ஒரு சோற்றில் பதம் பார்ப்பதுபோல் இங்கு எடுத்துக்காட்டிய இவரது துர்வாதங்களையகற்ற நமது முன்னோர்கள் கூறிய சாஸ்திரங்களில் சிலது விரிப்பாம். முதலில் சரீரத்தைத்தவிர்த்து ஆத்மா ஒருவனுண்டென்று ஒப்புக்கொள்ளுவதற்குக் காரணம் இவர்கள்விஷயத்தில் யுக்தியொன்றே முதன்மைபெற்றது. பின்பு அநுபவமும் உப-பலமுமாகும். இதை ஸாதிப்பதற்கு அவர்கள் கூறுவதை மறுப்பாம். அவர்கள் சொல்

லியபடி அறியும் தன்மை மூளைக்குச் சித்திக்குமாயின் எவ்விதத்திலும் ஜீவனுள்ளது பொய்யாய்விடும், அதுவே பொருந்தாது. மூளையினிடம் சரீரத்திலுள்ள நாம்புகளெல்லாம் சேர்ந்து செல்லுவது வாஸ்தவம்தான். ஆயினும் நாம் பின்னால் சொல்லப்போகிற சில காரணங்களால் மூளையென்பது மனதிற்கு ஓர் இடமாதலால் அவ்விடம் நாம்புகள் சேர்வது பயன்படும். அங்ஙனம் தலை மண்டையோட்டினுள் விஷயத்தை ஆலோசிக்கும்போது உண்டாகும் ஒருவித அசைவின் அனுபவமும் அக்காலத்து அவ்விடம் மனதென்னும் ஓர் நுட்பப்பொருளின் ஸம்பந்தமெனச் சொல்லவும் கூடும். தலையில் வலியுண்டாவது இதற்குக் காரணமேயாகாது. எங்ஙனமெனில் மூளையென்பது மண்டையோட்டிற்குள் இருக்கும் ஓர்வகை (நாம்பு மாம்ஸங்களின் தொகுதி)ப் பொருள். தலைவலியென்பதோ மண்டையோட்டின் வெளியில் மேல்சதைக்கும் எலும்புக்கும் நடுவில் செல்லும் ஓர் பித்தநீர்க் குழலில் நீர் தடுக்கப்பட்டு அப்பொழுது அக்குழலிலுண்டாகும் ஓர்வித உணர்வு. ஆதல்கொண்டே சில தலைவலிகளுக்கு வைத்தியர்கள் நெற்றி நெரிக்கிறோர் ஓடும் பித்தக்குழலைக் குத்தி நீரெடுப்பதை சிகித்ஸையாகக்கொண்டிருக்கிறார்கள். மூளை கலங்க அடிபடும்பொழுது ஒன்றுந்தோன்றாததும் மூளையின் தொழிலே புத்தியெனச் சாதிக்கக்காரணமாகாது. அவ்வாறு சரீரத்தில் பற்பல மர்மங்களிருத்தலால் அவ்விடங்களில் ஏதேனும் தாக்கினால் அவ்வாறு ஸம்பவிப்பது அனைவற்கும் தெரிந்தவிஷயமே. அவ்வாறு அறிவு கலக்கமுண்டாவது அது மனதின் ஸ்தானமானதினாலும் ஒவ்வும். அதுகொண்டு அதன் குணமே அறிவு எனத் துணிதல் கூடாது. அம்மூளையில் சிலபாகம் கெட்டால் காமம், கோபம் முதலிய குணங்கள் மனிதனுக்குக் குன்றிவருவதும் நாம்புகளில் சில வெட்டுண்டால் சில புலன்களுக்கு பிரயோஜனம் மாறுவதும் மூளையின் குணமல்ல. மூளையைக்காட்டிலும் வேறான மனதின் குணமே. அது ஒவ்வொரு வழியாய்ச் சரீரமெங்கும் சென்று ஒவ்வொரு ஸங்கதியையும் அறியுமாதலால் அவ்வழிகள் கெட்டால் அவ்விதம் ஸம்பவிக்கவும் கூடும். சரீரத்தின் உறுப்புகளில் ஒவ்வொன்றுக்கும் பிரயோஜனமிருக்க, மூளை ஒன்றுக்கு மாத்திரம் பிரயோஜனமில்லாததுகொண்டு மூளைக்கு அறிவே பிரயோஜனமென்று சொல்லுவதானால் இதுபோலவே பிரயோஜன

யில்லாத சில பேசிகளுக்கும் அறிவே பிரயோஜனமெனக்கொள்ள வேண்டிவருமல்லவா? அப்பொழுது மூளைக்கோரறிவு மற்ற பேசிகளுக்கு வெவ்வேறறிவு எனப் பலவிதம் பேசலாகும். இது உசிதமில்லையென்றறிக. மூளைக்குப் பித்தஸம்பந்தத்தால் அறிவு நிலை தப்புகின்றது என்றால்—அப்பொழுது "ஜாடராக்கினி" என்று வழங்கும் பித்தகோசத்திலும் இத்தன்மை உள்ளதாதலாலும், அப்பித்தம் சரியாயிருந்தால் புத்திநிலை சரியாயிருப்பதும், இல்லாவிடில் புத்திமாறுவதும் அனுபவத்திலிருப்பதாலும் "पित्तानुगातेकं मन: என்று பெரியோர் உரைப்பதாலும், அபின் முதலிய பித்தவஸ்துக்களின் சேர்க்கைபுத்தியை மயக்குவதினாலும் அதிகமாகப் புத்தியைச் செலவழித்துக் கடுமையான வேலை செய்தால் சீக்கிரத்தில் பித்தக்கொதிப்பென்னும் பசியும், அப்பசிக்கு ஏதேனுமுணவு தாராவிடில் வயிற்றுளைவு காணுவதாலும் அப்பித்தகோசத்தின் குணமே புத்தியென்று சொல்லவேண்டியதாகுமல்லவா? அப்படிச் சொல்வது பொருந்துமோ? மூளை சரீரத்தில் சிறந்ததாயிருப்பதென்றால் அப்பொழுது அந்த மூளைக்கும் சக்தியை விளைவிக்குமிரத்தத்தைச் சுத்திசெய்கின்ற ஹ்ருதயஸ்தானத்தைப் பார்க்கிலும் இதென்ன சிறப்புடையது? அந்த ஹிருதயத்தில் நமது சுவாஸமார்க்கமாய்ச்செல்லும் மலங்கள் சில நேர்ந்தால் அப்பொழுது நித்திரை (ஐம்புலன்களின் ஓய்வு உண்டாவதும், அப்படி நித்திரை செய்யுங்காலத்தில் கிளம்பும் மிதமிஞ்சிய மூச்சுக்களினால் மலங்கள் வெளிப்பட்டால் பின்பு மயங்கிய புலன்கள் வேலை செய்வதும் நம்மவர் அறிந்ததே. இங்ஙனம் தன்வந்திரிபகவானுபதேசித்தருளிய சுசுருதஸம்ஹிதையில்

शोणितकफप्रसादजं हृदयं विशेषेण चेतनास्थानम् ।
तस्मिंस्तमसाऽऽवृते प्राणिनः प्रस्वपन्ति ॥

என்று ஹிருதயம் புத்திஸ்தானமென்றும் அதில் மலங்கொண்டால் நித்திரை வருமெனவும் கூறியிருப்பதைக் காணலாம். அன்றியும் உலகெங்கும் ஒவ்வொரு மனிதனும் தன்னைக்குறிக்கும்பொழுதெல்லாம் நான் என்று கையால் மார்பைத்தட்டிக் காட்டுவது வழக்கமாயிருக்கிறது. இது சிறுவர் முதல் கிழவர் வரையிலும் உள்ளது. இக்காலத்தில் புத்தி தந்திரம் படித்தவரும் அவ்வாறே செய்கின்றனரன்றி வேறுவிதம் செய்யக்காணோம். இக்காலத்து

சாஸ்திரங்களைப் படித்தும், பல ஜனங்களாய் ஒருங்கு சேர்ந்து இனியாவது என் தலையில் அடித்துக் கொள்ளக் கூடாது. இவர்களது சாஸ்திரம் இவர்களுக்கே அனுபவத்திற்கு வரவில்லையே. அப்படியிருக்க மற்றவருக்கெப்படி வரும். இம்மட்டோடல்லாமல் இவர்கள் நமது முன்னோரெழுதிய நூல்களில் சரீரதத்துவங்கள் நன்றாய் நிரூபிக்கப்படவில்லையெனச் சொல்லி ஸ்வகோஷ்டியில் களிக்கின்றனர். இதனுண்மை ஆராய்ந்தவர்களுக்குத் தெரியும். இவ்வாற்றால் அறிவுமூளையின் குணமல்லவென்றேற்பட்டது. இவர்கள் சொல்லுகிறபடி அறிவு மூளையின் குணமேயாயின் இம்மூளையென்பது பெரியதோர் அளவுடையதாதலாலும் இதற்கு நாலாபக்கங்களிலும் நரம்புகள் ஸம்பந்தித்திருப்பதாலும் ஒரே காலத்தில் சேர்ந்தாப்போல் நான்கு ஐந்து அறிவுகள் உண்டாகக் கூடுமல்லவா? அவ்வாறு எவ்விடத்திலும் காணோம். எவருமவ்வாறு அனுபவிப்பதுமில்லை. ஒவ்வொருவரும் தாம் ஒரு விஷயத்தைக் கவனித்துக்கொண்டிருக்கும்பொழுது, மற்றொரு விஷயம் அதேகாலத்தில் அறியும்படி நேர்ந்தால் அவ்விஷயத்தில் மனம் வேறு விஷயத்திற் சென்றதனால் அதைக் கேட்டேனில்லை, என்று சொல்லுகின்றனரேயன்றி வேறில்லை. அப்படிக்கில்லாது இவ்வைம்புலன்களின் நரம்புகளும் ஒரே இடம் சேருமாயின் அவ்விடத்தில் எல்லாவிஷயமும் சேர்ந்து ஒன்றுடன் ஒன்று தாக்கி ஒருவிதமுமில்லாமற் போவதுடன், முன் கூறியபடி ஓரிடம் கெட்டால் காமம், ஓரிடம் கெட்டால் கோபம், முதலியன ஒழியுமென்பதும் ஒவ்வாது. இது நிற்க எல்லோருக்கும் அனுபவத்தில் காலில் வலி, கையில் சுகம், தலையில் வேதனை, என்று தனித்து ஒவ்வொரு அவயவங்களிலும் வெவ்வேறாய் சுகதுக்கங்களைக் கண்டிக்கிறோம். இவர்கள் சொல்லியபடி அசைவற்று ஓர் மூலையிற் கிடக்கும் மூளையிற்றானே அறிவென்னும் திரிபு உண்டாயிருக்குமாயின் இவ்வனுபவமெங்ஙனம் பொருந்தும். நாம் ஒரு வீட்டிற் புகுந்து பலவிடத்திலிருந்துவரும் தந்திக் கம்பிகளை தொட்டறியும் ஸங்கதியையும், இது இன்னவிடத்தில் உண்டாகுமென்பதையும் எவரேனும் அறிவாரோ? அக்கம்பிகளின் வழியாய் இடத்தைக் குறிக்கின்றதோர் அசைவுண்டானால் மாத்திரம் அறியக் கூடும். அது இவ்விடத்திற் பொருந்தாது. பின்னும் முதலில் நாம் ஒரு வஸ்துவைப் பார்த்தாலும், கேட்டாலும், உடனே

அவ்விடமுள்ள நாடிகளில் சில அசைவுண்டாகிப் (அதுவே அறிவு) பிறகு திரும்பிவரும் அசைவு ஒவ்வொரு இடங்களிலும் வந்து முடிவடையுமாதலால் அவ்வவ்விடத்துச் சுகதுக்கம் தோன்றுகிறதென்பதும் கூடாது. எவ்விதம் சொன்னாலும் அந்தந்த நாம்புகளிலுண்டாகும் அசைவு மூளையில் தாக்கினால் அறிவு என்னும் திரிபு அங்கு தோன்றுமேயன்றி வேறெங்கும் தோன்றாது. இக்காரணங்களால் மனமென்பது மூளையைக்காட்டிலும் வேறென்று துணியப்பட்டது. அம்மனது அணுவானதுகொண்டு எந்தக் காலத்தில் எந்த நாம்புடன் கூடுமோ, அந்தக் காலத்தில் அது வழிசென்று அதில் அடையக் கூடிய பொருளுணர்ச்சியையும் பெறும். ஒருபொழுதும் அணுவான மனதிற்கு அநேக நாம்புகளின் சம்பந்தமேற்படமுடியாததுபற்றி ஒருக்காலும் பல அறிவுகள் உண்டாவதற்கிடமில்லை. மேலும் அந்த மனது வேகமுள்ள வஸ்துவாதலால் சரீரமெங்கும் நாம்புகளின் வழியாகவும், இரத்தக் குழலின் வழியாகவும் சென்று ஆங்காங்கு சரீராவயவங்களிலுண்டாகும் சுக துக்கங்களைக் கவருவதால் ஒரே காலத்தில் அநேக உணர்ச்சி உண்டானதாகப் பிராந்தியால் தோன்றுமேயன்றி வேறல்ல. அன்றியும் ஒரு சமயம் சரீரத்தில் ஸஞ்சரிக்கும் இம்மனது பித்தத்தில் மூழ்கினால் அதுவே வேறுபடுவதற்குக் காரணமாகிறது. ஓர் நாம்பு அல்லது மூளையின் ஓர் பாகம் கலைந்தால் அதுவழியே சென்றறிய வேண்டிய சங்கதிகள் ஒழிந்துவிடும். இவ்வாற்றால் அறிவு மூளையின் குணமல்ல. ஆத்துமாவின்குணமே. அதைக்கொண்டு அவனை ஸாதிப்பதும் உசிதமே. ஆகவே ஆத்துமாவென்பது சரீராதிகளைவிட வேறுபட்டு விளங்குவதே ஆகுமெனச் சித்தித்தது.

2. "உயிர் என்பது யாது" இக்கேழ்வியின் கருத்தாவது ஜீவன், உயிர் இவ்விரண்டும் ஒன்றாய் இருத்தல் கூடாதா? அப்படி ஒன்றென்றால் சரீரத்துள்ள ஓர் பூதமாகிய வாயுவான உயிர் ஜீவனாக வேண்டிவரும். அங்ஙனமாயின் சரீரத்திலிருந்து வேறாக ஜீவன் சித்திக்கமாட்டாது. இரண்டும் வேறாயின் உயிரின் இலக்கணம் யாது? என்பதே. இதற்கு விடை. உயிரென்பது ஜீவனைவிட வேறாயுள்ளதுதான். அது இச்சரீரத்தில் நிறைந்திருக்கும் ஒருவகை வாயு. இந்த வாயு சரீரத்தினுள் பல ஸ்தானங்களிற்

சென்று பல வேலைகளைச் செய்து அனேகத் தொழிற் பெயரைப் பெற்றுள்ளது. அப்பெயர்களாவன— பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், நாதன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பன. இவைகளின் ஸ்தானம் (இடம்) தொழில்களைப்பற்றி யோகசாஸ்திர நூல்களிலும், வைத்தியசாஸ்திர நூல்களிலும் நன்கு காணலாம். ஆங்கே கண்டு தெளிக. ஒரே வாயுவுக்கு இடம், தொழில், இவற்றின் வேறுபாட்டால் எவ்விதம் பல பெயர்கள் ஒவ்வுமென்றால் கூறுவாம். ஒரேமனிதன் இடம்மாறி போயிருந்தாலும் வெவ்வேறு தொழிலைச் செய்வதாலும் அனேக காரணப் பெயர்களை அடைந்திருப்பதை நாம் கண்டதில்லையா? அதுபோலவாம் இதுவும். பொதுவாய் சரீரத்திலுள்ளவாயுவுக்கு பிராணன் என்றே ஒரே பெயரும் உண்டு. இதனால் உயிர் என்பது பிராணவாயு என்பதாயிற்று.

3. "மனது என்பது யாது?" இந்தக் கேள்வியின் கருத்தாவது— சரீரத்தைக் காட்டிலும் வேறாயும் அறிவிக்கிடமாயும் ஜீவனென்றொருவனிருப்பானேயானால் மனம் என்பது எதற்கு? அப்படியிருப்பின் மற்ற சரீர உறுப்புகளை நோக்கி அதன் தொழிலென்ன? அதாவது— மூளையென்றாலும் பொருந்தாதோ என்பது. இதற்கு உத்தரம். ஜீவன் அறிவிக்கிடமாயிருப்பினும் அவனது போறிவு இச்சரீரத்தில் அடங்கியிருப்பதால் மண்குடத்திலடங்கிய விளக்குப்போல் மற்றப் பொருளை அறியத்துணையாய் ஐம்புலன்களைக்கொண்டிருக்கிறான். இப்புலன்கள் வழியாக அவனது அறிவு செல்லுகின்றமையால் வெளிப்பொருள் உணரப்படுவதாகின்றது. தனித்து அறிவுக்கு துணைக்கருவி இல்லாமல் எப்பொருளையும் கவரமுடியாது. ஆகவே புலன்களென்கிற துணைக்கருவி அவனுக்கு அவசியமாகும். ஆதலால் வெளிப்பொருள்களை உணர வெளிப்புலன்களிருப்பது போல அகப்பொருளை அறிவதற்குத் துணைக்கருவியாய் அமைந்தது மனமென்பது. இதனால்மனமென்பது எதற்கு என்ற கேள்விற்குப் பதிலாயிற்று.

(தொடரும்)

V. சுந்தரேசன்.

# சோழமன்னர்களின் சரித்திரம்.

(ருகூஉ-வது பக்கத்தொடர்ச்சி)

## 25-வது அத்தியாயம்.

முனிவர்:– ஏ சிறந்த தவசியே! புண்யசாலியான சோழேந்திரனுக்கு அறியாமையாலேற்பட்ட ஹத்திதோஷம் எவ்விடத்தில் எவ்வாறு விலகிற்றென்பதைக் கூறுங்கள்.

ஸூதர்:– தகப்பன் காலஞ்சென்றதும் சுந்திரசோழன் என்னும் அரசன், சேரமன்னனின் குமாரி சித்திரவல்லி என்னும் ஓர் பெண்ணை விவாஹம் செய்துகொண்டு அவளுடன் இச் சோழ மண்டலத்தை ஆண்டுவந்தான். சிவபக்தியுடன் பலசிவாலயங்களைக்கட்டுவித்தான். குலோத்துங்கன் என்னும் மன்னனுக்குச் சிவனுலளிக்கப்பட்டதும், பலவரசர்களாலும் தரிக்கப்பட்டதுமான மகுடத்தையும் சோழேந்திரனென்னும் தங்கப்பட்டத்தையும் தரித்துக்கொண்டு விபூதி ருத்திராக்ஷங்களணிந்துகொண்டு சிவபக்தர்களையர்ச்சித்துக்கொண்டும் சிவலிங்கத்தைப் பூஜை செய்துகொண்டும் வந்தான்.

மூன்று மந்திரிகளுடன் இராஜ்ஜியத்தையாண்டுவந்தான். அரசன் செய்யவேண்டுவனவெல்லாம் முறையே செய்துவந்தான். உத்பலாவதியென்னும் தன் மகளைப் பாண்டியமன்னனுக்கு மணம் புரிவித்தான். பல சிவாலயங்களைக் கட்டுவித்துப் பூஜைகளையும் உற்சவங்களையும் நடத்தினான். காலகாலன் என்னும் மகனைப் பெற்றெடுத்தான். அம்மகன் தாய்தந்தையர்களின் அடிமலர்களில் மிக்கவன்புடையவனுகவிருந்துகொண்டு சாஸ்திரங்களிலும் தேர்ச்சிபெற்று விளங்கிக்கொண்டும் மிக்க வணக்கமுடைய கேரளமன்னனின் குமாரியாகிய குணவதிஎன்னும் மாதை மணந்தான். அரசகுமாரன் தன் மனையாளுடன் சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருந்தான்.

சுந்தரசோழன்என்னும் அரசன் இவ்வாறு உலகாண்டுவருகையில் கர்னுடகதேசத்து அந்தணர் ஒருவர் மன்னவனரண்மனை வாயிலிற்சென்று தங்கப்பிரம்பைக் கையிலேந்திய காவலர்களை நோக்கிக் கூறலானுன்.

அந்தணர்:— ஏ காவலர்களே! காசியிலிருந்து நான் வந்திருப்பதாய் உங்கள் சோழமன்னரிடங்கூறுங்கள். நான் இராமேச்வரஞ் செல்லப்போகிறேன். கர்ப்பிணியாயிருப்பவளும் வழி நடந்துசெல்லச் சக்தியற்றவளுமான என்னுடைய மனைவியாளை நான் திரும்பிவருமளவும் பாதுகாக்குமாறு அரசனிடம் ஒப்புவிக்கப்போகிறேன்.

राजा माता पिता मह्यं चोलानां विप्रपालनम् ।
धर्मः किल ततो लज्जां विहायेत्थं वदाम्यहम् ॥

எனக்குத் தாயும் தந்தையும் அரசனேயாவான். அந்தணர்களைக் காத்தல் சோழமன்னர்களின் முக்கிய தருமமல்லவா? ஆதலால் இவ்வாறு வெட்கமின்றிக் கூறுகிறேன். என்னுடைய இந்த வேண்டுகோளை அரசனிடம் சென்றறிவியுங்கள். ஏ காவலர்களே! என்னிடம் கருணை பாராட்டுங்கள். நாளையதினம் கங்கைநீரைக் கொண்டு செல்லப்போகிறேன். இராமேசுவராபிஷேகத்திற்காக நான் ஒன்றும் வேந்தனிடமிருந்து அடையவிரும்பவில்லை.

அதுகேட்ட காவலர்கள் மறையோனின் வேண்டுகோள்படி சென்று ஸபைநடுவே ஸிம்மாஸனத்தில் வீற்றிருப்பவனும், இருபுறமும் வெண்சாமரங்களால் வீசப்பெற்றவனும்,

मन्त्रिभिः कविविद्वांसैः गीतज्ञैः दैवचिन्तकैः ।
सदाशिवपुराणोक्त क्षेत्रसूचनतत्परैः ।
पुराणानां विशेषज्ञैः मन्त्रज्ञैः सुसमावृतम् ॥

மந்திரிகளாலும், கவிகளாலும், வித்வான்களாலும், பாடுகின்றவர்களாலும், ஸதாசிவ புராணங்களிற் கூறப்பட்டுள்ள க்ஷேத்திரங்களையெடுத்துக்காட்டும் புராணதத்துவங்களை அறிந்தவர்களாலும், மந்திரங்களைக் கற்றவர்களாலும் நன்கு சூழப்பெற்றவனும், சேனைத்தலைவர்களாலும், மற்றஸேவகர்களாலும் என்றுந்தொழப்பட்டவனுமான வேந்தனை வணங்கிக் கூறினர்.

(தொடரும்)

N. வைத்யநாதசாஸ்திரி.